**தலைப்பு 315 – வட மாகாண சபை – 2022**

**01. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் பணிப்பொறுப்புக்கள்**

**1.1 தூரநோக்கு**

நல்லாட்சியை முறைப்படி நடைமுறைப்படுத்துவதன் மூலம் வடக்கு மக்களின் அபிலாசைகளை பூர்த்திசெய்யும் சுபீட்சத்தினையும் நிலைபேறான அபிவிருத்தியையும் அடைதல்.

**1.2 பணிக்கூற்று**

வடக்கு மக்களை மையப்படுத்தி சேவைகளையும், வசதிகளையும் மீள செயற்படுத்துதல் மூலம் மனிதவள வாண்மைவிருத்தியையும், உட்கட்டமைப்பு வசதிகளையும் மீள் உருவாக்கம் செய்து வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புதல்.

**1.3 பணிப்பொறுப்புக்கள்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தினுடைய மாகாண சபை நிரல் மற்றும் பொது நிரல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**02. நிதிக்கூற்றுக்கள்**
**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

வட மாகாண சபைக்காக வழங்கப்பட்ட மொத்த நிதிஏற்பாடு ரூபா 32,682.04 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த ரூபா 31,313.77 மில்லியன் நிதியேற்பாடும் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய சேமிப்பானது ரூபா 1,368.27 மில்லியனாக அல்லது மொத்த தேறிய நிதியேற்பாட்டின் 4.19 சதவீதமாக காணப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக | | | சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழும் | 30,195.00 | 29,569.14 | 625.86 | 2.07 |
| மூலதன | 2,487.04 | 1,744.63 | 742.41 | 29.85 |
| | **32,682.04** | **31,313.77** | **1,368.27** | **4.19** |

**03. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகள் மாகாண சபையினால் மாகாண சபையின் நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபையின் நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.